## சாதாரண கூட்ட நிகழ்ச்சி நிரல்

**கூடலூர் நகராட்சியில் ஆகஸ்ட் மாதம் (31.08.2020) ஆம் நாள் திங்கள்கிழமை காலை 10.30 மணிக்கு நகராட்சி அலுவலக நகர் மன்ற கூட்ட அரங்கில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் நிறைவேற்றப்பட்ட மன்ற தீர்மானங்கள்.**

**பொருள்.1**

நகராட்சி ஆணையாளர் அவர்களின் 07/2020 ஆம் மாதத்திய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

பதிவு செய்யலாம்.

**தீர்மான எண்.969, பதிவு செய்யப்பட்டது.**

**பொருள்.2**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் ஈச்சர் டிப்பர் லாரி வாகன எண்.TN 60 T 6098 க்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு இன்ஸ்சூரன்ஸ் கட்டணம் தொகை ரூ.34610/-ம், TN 60 T 6093 க்கு இன்ஸ்சூரன்ஸ் கட்டணம் தொகை ரூ.22,561/–ம் ஆக மொத்தம் தொகை .ரூ.57,171/-ஐ செலுத்த மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.815/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.970,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.3**

கூடலூர் நகராட்சிக்கு **தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்புத் திட்டம் 2020-2021 (TURIP- 2020-21)**-ன் கீழ் சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.9025/2019/இ3,நாள்.16.07.2020** ன்படி, கீழ்கண்ட பணிகளுக்கு **ரூ. 200.00** இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது.அதன் விபரம்

| வ எண் | பணிகளின் விபரம் | மதிப்பீட்டுத் தொகை (ரூ.இலட்சத்தில்) |
|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சி வார்டு எண் 7,விதைப்பண்ணை சாலை, வார்டு எண் 8,10 இராஜா கிணற்றுதெரு, வார்டு எண் 12,மேதாகாரர் தெரு, வார்டு எண் 13,கப்பாமடை சாலை, வார்டு எண் 15,கன்னிகாளிபுரம் மெயின் மற்றும் குறுக்கு தெருக்கள் மற்றும் வார்டு எண் 19,வடக்கு ரத வீதி ஆகிய தெருக்களில் சி.எம்.பி. முறையில் தார்ச்சாலை அமைத்தல்.. **(சிப்பம் எண்.1)** | **200.00** |

மேற்கண்ட பணிகளுக்கு சென்னைநகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.9025/2019/இ3 நாள்.16.07.2020.** ன்படி நிர்வாக அனுமதியும், சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக தலைமை பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை **ந.க.எண்.25039/2019/DO2 நாள்.22.07.2020.** ன்படி நாள் தொழில்நுட்ப அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. அதன்பேரில் மேற்கண்ட சாலை பணிக்கு **18.08.2020** ஆம் நாள் மின்னனு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.அதன் விபரம்

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு. த.தமிழ்ராஜன் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.98 சதவீதம் அதிகம் |
| 2, | திரு.ஆர்.பரமாநந்தன் | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.76 சதவீதம் அதிகம் |

மேற்கண்டவாறு சிப்பம் எண்-1க்கு மேற்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் **18.08.2020** அன்று தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளி மட்டும் **(Technical Bid)** திறக்கப்பட்டது, மேற்கானும் தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளியில் நிர்ணயிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப தகுதிகள் தொழில்நுட்ப தகுதிகள் **(Tender Scrutiny Committee)**சரிபார்க்கும் குழுவினரால் ஆய்வு செய்யப்பட்டது. இவ்வாய்வின்படி மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளுமே பணிமேற்கொள்ள தகுதியான ஒப்பந்தப்புள்ளியாக இருந்தது. இதற்கான விலை ஒப்பந்தப்புள்ளி உரையினை **(Price Bid) 21.08.2020** ஆம் நாளன்று திறக்க அறிவிப்பு வழங்கப்பட்டது. **21.08.2020-** ஆம் நாளன்று வரபெற்ற இரண்டு ஒப்பந்தாரர்கள் முன்னிலையில் விலை புள்ளி உரை **(price Bid)** திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் சரிபார்க்கப்பட்டதில் சாலை பணி

சிப்பம் எண்-1க்கு அரசால் நிர்ணயிக்கப்பட்ட மதிப்பீட்டு விலை விகிதத்தை விட **4.98%** கூடுதலான விலை விகிதத்தில் **திரு.த.தமிழ்ராஜன்**அவர்கள் கூடுதலில் குறைவான கூடுதல் விலை விகிதம் கொடுத்துள்ளார்.மேற்படி ஒப்பந்ததாரக்கு **21.08.2020** ம் நாள் விலை குறைப்பு கேட்பு கடிதம் அனுப்பபட்டதின் பெயரில் **திரு.த.தமிழ்ராஜன்.** ஒப்பந்ததாரர் அவர்கள் வேலை ஆட்கள் கூலி உயர்வு, மற்றும் கட்டுமான பொருட்கள் விலை உயர்வின் காரணமாக **4.98%** கூடுதலான விலை விகிதத்தில் இருந்து விலை குறைப்பு செய்துதர இயலாது என்று **25.08.2020 ஆம்** நாள் கடிதம் கொடுத்துள்ளார். அதன் விபரம் கீழ்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண். 929/2020/இ1)**

**சிப்பம் எண் -1**

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிடப்பட்டுள்ள விலை விகிதம் |
|---|---|---|
| 1 | திரு.த.தமிழ்ராஜன். | மதிப்பீட்டு தொகைக்கு (+) 4.98 சதவீதம் அதிகம் |
| 2, | திரு.ஆர்.பரமாநந்தன். | மதிப்பீட்டு தொகைக்கு (+) 5.76 சதவீதம் அதிகம் |

**அலுவலகக்குறிப்பு:-** **1)** வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் இரண்டும் மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மதிப்பீட்டு விலை விகிதத்தினை விட கூடுதலில் குறைவான **4.98%** கூடுதல் விலை விகிதம் வழங்கியுள்ள **திரு. த.தமிழ்ராஜன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**2)** மேற்கண்ட பணிகளில் மதீப்பிட்டை விட கூடுதலாகும் செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.971,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.4**

தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்துார், இயக்குநர் அவர்களது கடித ந.க.எண்.276/2020/அ2 நாள்.18.08.2020 கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு ,கூடலூர் நகராட்சியின் பங்களிப்பு தொகை 2020-2021ம் ஆண்டிற்கு ரூ.20,000/-(ரூபாய் இருபது ஆயிரம் மட்டும்) தமிழ்நாடு நகரியல் பயிற்நி நிறுவனம் கோயம்புத்துார் அவர்களுக்கு செலுத்திட மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.997/2017/சி1)**

**<u>அலுவலக குறிப்பு</u>.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.972,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.5**

இந்நகராட்சியில் பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் ஈச்சர் டிப்பர் லாரி வாகன எண்.TN 60 AY 3850 க்கு 2020-2021 ஆம் ஆண்டிற்கு இன்ஸ்சூரன்ஸ் கட்டணம் செலுத்த உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.40,000/-க்கு, மன்றத்தின் அனுமதிக்கு. (ந.க.எண்.815/2020/எச்1)

**<u>அலுவலக குறிப்பு</u>.**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.973,அனுமதிக்கப்பட்டது**

**பொருள்.6**

கூடலுார் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**933** நாள்.**30.06.2020** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **19.08.2020** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்:1062/2020/ இ1)**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-20ல் உள்ள எல்.எப். சாலையின் மேல் புறம் அமைந்துள்ள பெண்கள் கழிவறைக்கு எல்.எப். சாலையிலிருந்து சென்று வர சுள்ளக்கரை ஓடையின் குறுக்கே சிறுபாலம் அமைத்தல் | 4.50 | திரு.சி.சேரலாதன் | 0.02% | – |
| | | | திரு.பி.முருகன் | – | 0.07% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.02% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.சி.சேரலாதன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.974,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.7**

கூடலூர் நகராட்சி, நகர்மன்றத் தீர்மான எண்.**943** நாள்.**30.06.2020** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **19.08.2020** ம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்:887/2020/ இ1)**

| வ. எண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரரின் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட்டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் வார்டு எண்-10 பெத்து குளத்தில் உள்ள நகராட்சி உரக்கிடங்கில் கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (FSTP) அமைக்கும் இடத்தில் உள்ள குப்பைகளை அகற்றுதல். | 5.50 | திரு.ஆர்.பரமானந்தன் | 0.09% | – |
| | | | திரு.கே.வனராஜ் | – | 1.22% |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டினை விட 0.09% குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள **திரு.ஆர்.பரமானந்தன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம்

**தீர்மான எண்.975,அங்கீகரிக்கப்பட்டது.**

**பொருள்.8**

கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **27.07.2020** ஆம் நாள் விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், பரிசீலனைக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்ததாரரின் பெயர் | விலைப்புள்ளி தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| 1 | கூடலூர் நகராட்சியில் அனைத்து பகுதிகளிலும் அம்மா இரண்டு சக்கர வாகனம் வழங்கும் திட்டத்திற்கு ஆட்டோவின் மூலம் ஒலி பெருக்கி விளம்பரம் செய்தது. | **இளையராஜா ஒளி நிலையம்**, கூடலூர் | 1 நாள் ஒன்றுக்கு ரூ.2500/- |
| | | தாஜ் ஆடியோ விஷன் , கம்பம் | 1 நாள் ஒன்றுக்கு ரூ.2800/- |

<u>அலுவலக குறிப்பு.</u>

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் நாள் ஒன்றுக்கு ரூ.2500/—க்கு குறைந்த விலைபுள்ளி கொடுத்துள்ள **இளையராஜா ஒளி நிலையம், திரு.ரா.ராமசாமி,** கூடலூர் அவர்களின் விலைப்புள்ளியினை மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.976,அனுமதிக்க**ப்பட்டது.

**பொருள்.9**

கூடலூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்து பகுதிகளிலும் வசித்து பணிபுரிந்து வரும் பெண்களுக்கு, 2020—2021 ஆம் ஆண்டிற்கு அம்மா இரண்டு சக்கர வாகனம் வழங்கும் திட்டத்திற்கு ஆட்டோவின் மூலம் ஒலி பெருக்கி விளம்பரம் செய்வதற்கு உத்தேச செலவினம் தொகை ரூ.10,000/— க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.3212/2019/ அ2)**

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.977,அனுமதிக்க**ப்பட்டது.

**பொருள்.10**

தேனி மாவட்டம் இரண்டாம் நிலை நகராட்சியான கூடலூரில் 32 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 2011 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 41924 மக்கள்தொகையுடன் 11685 குடியிருப்புகள் 21 வார்டுகளாகப் பிரிக்கப்பட்டு பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

மேற்கண்ட பணியில் 39 DBC பணியாளர்கள் 6 குழுக்களாகப் பிரிக்கப்பட்டு குழு ஒன்றுக்கு 6 நபர்கள் வீதம் அதாவது ஒவ்வொரு நபரும் நாள் ஒன்றுக்கு 50 வீடுகளில் பணிகளை மேற்கொள்ள 1 குழுவில் உள்ள 6 DBC பணியாளர்கள் நாள் ஒன்றுக்கு 300 வீடுகளில் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளையும், தரைத் தள தொட்டிகளை பார்வையிட்டு கொசு உற்பத்திக்கு எதுவாக திறந்திருக்கும் தொட்டிகளில் தேவைப்பட்டால் அபேட் மருந்து ஊற்றி கொசுப்புழுக்களை அழித்தும் கொசுப்புழு வளர்ந்து காணப்பட்டால் தண்ணீரை அப்புறப்படுத்தியும் வீட்டின் சுற்றுப்புறத்தில் உள்ள தேவையற்ற பொருட்களான டீ, கப், தேங்காய் ஓடு, பழைய பிளாஸ்டிக் பைகள், டயர்களை அப்புறப்படுத்தியும் பொது மக்களுக்கு டெங்குநோய் பரவும் காரணங்களை எடுத்துக்கூறி விழிப்புணர்வும் கொடுக்கப்பட்டு வருகிறது.

மேற்கண்ட DBC பணியாளர்களுக்கு தேனி மாவட்ட ஆட்சியரின் செயல்முறை உத்திரவின்படி 39 DBC பணியாளர்களுக்கு நாளொன்றுக்கு ரூ208 மற்றும் தொழிலாளர் சேமநலநிதி ரூ 25 சேர்த்து ரூ 260 வீதம் ஜனவரி 2019 முதல் ஜூலை 2019 வரை ஊதியத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்கிட நகர்மன்றத் தீர்மான எண் 564 நாள் 08.03.2019 —இல் அனுமதி பெறப்பட்டு நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. தற்சமயம் தினக்கூலி அடிப்படையில் மாவட்ட ஆட்சியரகத்தின் வழிகாட்டுதலின் படியும், சேமநலநிதி ரூ 25 சேர்த்து நாள் ஒன்றுக்கு ரூ 260 வீதம் ஆகஸ்ட் 2019 மற்றும் செப்டம்பர் 2019 வரை உரிய EPF செலுத்தி 39 DBC (Dengue breeding checkers) பணியாளர்களை பணியமர்த்தி பணிகளை மேற்கொள்ள நகர்மன்ற மன்றத்திற்கு பொருள் வைக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் தற்போது மேற்காணும் டெங்கு களப்பணியாளர்களை ஜனவரி 2020 முதல் மார்ச் 2020 வரையிலான 3 மாதங்களுக்கு தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மாவட்ட ஆட்சியரின் (2019—20) செயல்முறை உத்திரவின்படி அனுமதிக்கப்பட்ட தினக்கூலி அடிப்படையில் 39 நபர்களை பணியமர்த்தி நகர்மன்றத் தீர்மான எண்:889 நாள் 31.003.20 மற்றும் நகர்மன்றத் தீர்மான எண்:797 நாள் 31.12.19 இன் படி நகர்மன்ற தீர்மானத்தில் அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தற்போது அக்டோபர் 2020 முதல் டிசம்பர் 2020 வரையிலான காலத்திற்கு 39 டெங்கு களப்பணியாளர்களை பணியமர்த்தி ஏற்படும் செலவினம் கீழ்க்கண்டவாறு உள்ளது.

**கீழ்க்கண்டவாறு (2020—2021)**

1) நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ 217 வீதம் (அக்டோபர் 2020 முதல் டிசம்பர் 2020 முடிய)
(91* 217 * 39 ) = ரூ 770133
2) தொழிலாளர் சேம நல நிதி (13.15 %) = ரூ 101272
3) தொழிலாளர் ESI (4.75%) = ரூ 36581
4) தொழிலாளர் LIC (50* 39* 3) = ரூ 5850

5) நிர்வாக செலவு 5% = ரூ 38507

-----------

**மொத்தம்** ரூ 9,52,343

-----------

கொசு ஒழிப்பு பணிக்காக 39 DBC பணியாளர்கள் பணியமர்த்த 3 மாதங்களுக்கு (அக்டோபர் 2020 முதல் டிசம்பர் 2020 முடிய) உண்டாகும் உத்தேச செலவீனம் ரூ 10,00,000/– க்கு பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனியார் மூலம் ஆட்கள் பெற்று டெங்கு களப்பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.

**அலுவலகக்குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் மற்றும் கொரோனா தடுப்பு பணிகளின் அவசர அவசியம் கருதியும் ஏற்கனவே DBC பணிக்கு ஆட்கள் வழங்கி வரும் **(CLEAN CARE SERVICE CENTRE)** என்னும் நிறுவனத்தாருக்கு ஏற்கனவே ஒப்பந்த புள்ளியில் கொடுத்துள்ள ரூ.281/– விலை விகிதத்தில் பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.978,அனுமதிக்க**ப்பட்டது.

**பொருள்.11**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்காக பயன்படுத்தப்பட்டு வரும் இலகரக வாகனம் (LCV) TATA ACE வாகன எண்.TN 60 AV 4020, TN 60 AV 4052, க்கு 2020–2021 ஆண்டிற்கு இன்ஸ்சூரன்ஸ் கட்டணம் செலுத்த உண்டாகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு. **(ந.க.எண்.815/2020/எச்1)**

**அலுவலக குறிப்பு.**

மன்றம் அனுமதிக்கலாம்.

**தீர்மான எண்.979,அனுமதிக்க**ப்பட்டது.

**பொருள்.12**

இந்நகர்மன்றத் தீர்மான எண்.**949** நாள்.**31.07.2020** ஆம் தேதிய தீர்மானத்தில் அனுமதிக்கப்பட்டபடி, கீழ்கண்ட பணியினை மேற்கொள்ள **20.08.2020** ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது. **(ந.க.எண்.296/2020/எச்.1)**

| வ. எ ண். | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத் தில் | நிறுவனத்தாரின் பெயர் | விலை விகிதம் | |
|---|---|---|---|---|---|
| | | | | மதிப்பீட்டை விட குறைவு | மதிப்பீட் டை விட அதிகம். |
| 1 | கூடலூர் நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் உள்ள ஈச்சர் டிப்பர் லாரி வாகனம் எண்.TN 60 T 6093 தகுதிச்சான்று ஜீலை மாதம் 2020 இல் முடிவடைகிறது. மீண்டும் தகுதிச்சான்று பெறுவதற்கு மேற்படி வாகனத்தினை பராமரித்தல். | 1.15 | திரு.ஸ்ரீ விநாயகா மோட்டார்ஸ், கம்பம். | மதிப்பீட்டு விலை விகிதம் | – |
| | | | திரு.ஓம்சக்தி ஆட்டோமொபைல் ஸ் கம்பம். | – | -12.35 |

**அலுவலகக் குறிப்பு : –** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டு விலை விகிதம் கொடுத்துள்ள திரு.ஸ்ரீ விநாயகா மோட்டார்ஸ், கம்பம் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியினை மன்றம் அங்கீகரிக்கலாம் .

**தீர்மான எண்.980, அங்கீகரிக்கப்பட்டது..**

**பொருள்.13**

கூடலூர் நகராட்சியில் உள்ள பொறியியல் பிரிவு மற்றும் குடிநீர் பிரிவில் ஒரு வருட காலத்திற்கு ஒப்பந்ததாரர் மூலம் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.513 நாள் 28.01.2019ன்படி ரூ.5.50 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி பெறப்பட்டது.மேற்படி பணிக்கு 26.06.2019 ஆம் நாள் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டதில் குறைவான விலைவிகிதம் கொடுத்திருந்த ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியானது இந்நகர்மன்றத் தீர்மான எண்.621 நாள்.18.07.2019ன்படி அங்கீகரிக்கப்பட்டதின்படி 18.07.2019 ஆம் நாள் மேற்படி ஒப்பந்தாரருக்கு பணி ஆணை வழங்கப்பட்டு ஜீலை திங்கள் 2020 வரை ஆட்கள் பெற்று பணிகள் மேற்கொள்ளபட்டு வருகிறது. மேலும் மூன்று மாத காலங்களுக்கு (ஆகஸ்ட் 2020 முதல் அக்டோபர் 2020 வரை தற்பொது ஆட்கள் வழங்கிவரும் ஒப்பந்ததாரர் திரு.பி.முருகன் அவர்கள் மூலம் ஆட்களை பெற்று பணிகள் மேற்கொள்ளவும் அதற்குண்டாகும் உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு.

**(ந.க.எண். 789/2019/இ1)**

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தினை நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண்.981,அனுமதிக்க**ப்பட்டது.